# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கணக்கீடு<br>Accounting | Three Hours<br>Gr -12 (2023) | 33 | T | I,II |

அறிவுறுத்தல்கள்:-

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிகோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.

சுட்டெண் :....................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 – 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

## பகுதி – I

01. தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான பொருளாதாரத் தகவல்களை தொடர்பாடல் செய்வது கணக்கீட்டின் பிரதான நோக்கமாகும் கீழ்வருவனவற்றுள் பொருளாதாரத் தகவல்கள் எவையென குறிப்பிடுக.
   A) வணிகத்தின் நிதியாண்டிற்கான இலாபம் ரூபா 25000
   B) நிறுவன ஊழியர் எண்ணிக்கை 500
   C) வணிகத்தின் மொத்தச் சொத்துக்கள் பொறுப்பாக்களை விட ரூபா 45000 அதிகமாகும்.
   D) குறிப்பிட்ட நேரத்தில் கூடுதலான அலகுகளை உற்பத்தி செய்யும் ஊழியர்களுக்கு அலகு ஒன்றிற்கு ரூபா100 விசேட கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.
   E) ஊழியர்களை ஊக்குவிக்கும் சிறந்த வேலைச் சூழல் ஒன்று நிறுவனத்தில் காணப்படுகின்றது.
   1) A,B,C  2) A,C,D  3) C,D,E  4) B,C,D  5) A,C,E

   (………..)

02. கணக்கீட்டு தகவல்கள் சில கீழே தரப்படுகின்றன.
   வணிக அலகு தொடர்பில் அக்கறையுடைய தரப்பினர்கள் அவ்வாறு அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் சில கீழே தரப்படுகின்றன.
   1) பொருட்கள் சேவைகளை தொடர்ச்சியாக கொள்வனவு செய்தலை உறுதிப்படுத்தல்
   2) திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா?
   3) முதலீட்டிற்கு ஏற்ப அனுகூலம் கிடைக்கப்பெற்றுள்ளதா?
   மேற்படி தகவல்களுக்கு ஏற்ப அக்கறையுடைய தரப்பினர் முறையே

   1) முகாமையாளர், உரிமையாளர், வாடிக்கையாளர்
   2) கடன்கொடுத்தோர், உரிமையாளர், வாடிக்கையாளர்
   3) முகாமையாளர், உரிமையாளர், அரச நிறுவனம்
   4) வாடிக்கையாளர், முகாமையாளர், ஊழியர்கள்
   5) வாடிக்கையாளர், முகாமையாளர், உரிமையாளர் (………..)

03. நிதிக்கணக்கீடு, முகாமைக்கணக்கீடு தொடர்பான பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.

A) வரலாற்றுத்தகவல்கள் மாத்திரம் பயன்படுத்தப்படும்

B) உள்ளக பிரிவினர்களுக்கு மாத்திரம் தகவல்கள் முன் வைக்கப்படும்

C) கணக்கீட்டு எண்ணக்கருக்கள், சட்டதிட்டங்கள், கணக்கீட்டு நியமங்கள், போன்றவற்றிற்கு உரியதன்று

D) குறிப்பிட்ட கணக்காண்டு காலத்திற்கான தகவல்கள், ஒருதடவை முன்வைப்படல்

E) எதிர்வு கூறல் தகவல்களும் பயன்படுத்தப்படும்

மேற்படி பண்புகளுள் நிதிக்கணக்கீட்டின் பண்புகள்

1) Aயும், Dயும் 2) Bயும், Cயும் 3) Dயும், Eயம்

4) Aயும், Cயும் 5) Cயும், Eயும் (………..)

- 4,5,6,7 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.

ஜனகன் என்பவர் 01 – 01 – 2022 இல் ரூபா 650000 பணத்தினை முதலிட்டு தளபாட விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்தார் ஜனவரி மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

| **திகதி** | **விபரம்** |
|---|---|
| 08 – 01 – 2022 | பாத்திமா வியாபாரிகளிடம் இருந்து ரூபா 500000 பெறுமதியான தளபாடங்கள் கடனுக்கு கொள்வனவு |
| 14 – 01 – 2022 | பாத்திமா வியாபரிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களில் ரூபா 20000 பெறுமதியான தளபாடங்கள் திருப்பி அனுப்பப்பட்டன |
| 20 – 01 – 2022 | ரூபா 300000 பெறுமதியான தளபாடங்கள் சேயோன் என்பவருக்கு ரூபா 500000 காசிற்கு விற்பனை செய்யப்பட்டது |
| 28 – 01 – 2022 | பாத்திமா வியாபாரிகளுக்கு கொடுக்க வேண்டிய முழுத்தொகையும் ரூபா 6000 கழிவு பெற்றதன் பின்னர் கொடுத்துத் தீர்க்கப்பட்டது |
| 30 – 01 – 2022 | நிறுவன பாவனைக்காக EUT நிறுவனத்திடம் இருந்து கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட அலுமாரியின் கிரயம் ரூபா 50000 |

04. ஜனவரி 8ம் திகதியில் இருந்து 20ம் திகதி வரையிலான கொடுக்கல் வாங்கல்களை அவை நிகழ்ந்த ஒழுங்குவரிசையினர் அடிப்படையில் ஜனகன் வியாபாரத்தின் புத்தகங்களில் பதிவு செய்வதற்குபயன்படுத்தப்பட்ட மூல ஆவனங்கள் முறையே

1) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, வரவுதாள், பற்றுச்சீட்டு

2) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, செலவுத்தாள் பற்றுச்சீட்டு

3) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, வரவுத்தாள், பட்டியல்

4) பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு

5) பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு (………..)

05. 20ம் திகதியில் இருந்து 30ம் திகதி வரை இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கான மூலஏடுகளின் ஒழுங்கு வரிசை முறையே

1) காசுப்பெறுவனவு நாளேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு, கொள்வனவு நாளேடு

2) காசுப்பெறுவனவு நாளேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு, பொதுநாட்குறிப்பேடு

3) காசுப்பெறுவனனவு நாளேடு, பொதுநாட்குறிப்பேடு, கொள்வனவு நாளேடு

4) கொள்வனவுத்திரும்பல் நாளேடு, பொதுநாட்குறிப்பேடு, கொள்வனவு நாளேடு

5) காசுப்பெறுவனவு நாளேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு, கொள்வனவுத் திரும்பல் நாளேடு

(………..)

06. ஜனவரி மாத முடிவில் ஜனகன் வியாபாரத்தின் இருப்பின் (தளபாட இருப்பு) பெறுமதி?

1) ரூபா 500000 2) ரூபா 300000 3) ரூபா 180000

4) ரூபா 230000 5) ரூபா 140000

07. ஜனகன் வியாபாரத்தில் 01 – 01 – 2022 இற்கு பின்னர் உரிமையில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு or குறைவு யாது?

1) ரூபா 206000 அதிகரிப்பு
2) ரூபா 856000 அதிகரிப்பு
3) ரூபா 506000 அதிகரிப்பு
4) ரூபா 756000 அதிகரிப்பு
5) ரூபா 856000 அதிகரிப்பு

(………..)

08. சில்லறைக் காசுக் கட்டுநிதி முறையினைப் பயன்படுத்தும் வணிகமொன்றின் மாதாந்த கட்டு நிதிப்பெறுமதி ரூபா 5000ஆகும் மாத ஆரம்பத்தில் கட்டுநிதி மீள் நிரப்பப்படுவதுடன் டிசம்பர் மாதத்தில் இருந்து கட்டுநிதி ரூபா 500 ஆல் அதிகரிக்கப்பட்டதற்கேற்ப 2021 நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குமாக வெவ்வேறாக பிரதம காசாளரால் சில்லறைக் காசாளருக்கு வழங்கப்பட்டு மீள் நிரப்பப்பட்ட மொத்தத்தொகை ரூபா 9800 ஆகும். 2021 – 11 – 30 இல் சில்லறைக் காசாளரின் கையில் மீதியாக ரூபா 700 காணப்பட்டதாயின் டிசம்பர் மாதம் சில்லறைக் காசாளரால் செலவு செய்யப்பட்ட தொகை யாது?

1) ரூபா 5000
2) ரூபா 3700
3) ரூபா 5600
4) ரூபா 4200
5) ரூபா 4600

(………..)

09. பின்வரும் தகவல்கள் 31 – 03 – 2022 இல் உள்ளவாறு தனியுடமை வியாபாரமான ரங்கா வியாபாரத்துடன் தொடர்புடையதாகும்.

மொத்தச் சொத்துக்கள் ரூபா 186000
மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 87000

31 – 03 – 2021 இல் உள்ளவாறான இவ் வியாபாரத்தின் உரிமையாண்மை ரூபா 100000 ஆகும்.
31 – 03 – 2022 இல் முடிவடைந்த வருடத்தில் உரிமையாளர் வியாபாரத்தில் இருந்து ரூபா 18000 ஐப் பற்றியுள்ளதுடன் மேலதிக மூலதனமாக ரூபா 39000 ஐ முதலிட்டுள்ளார். எனின் 31 – 03 – 2022 இல் நிறுவனம் உழைத்த இலாபம் or நட்டம்

1) இலாபம் 19000
2) நட்டம் 19000
3) நட்டம் 12000
4) நட்டம் 22000
5) இலாபம் 12000

(………..)

10. 31 – 03 – 2022 இல் வரையறுத்த அல்பா PLC இன் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது ரூபா 328000 ஆகும் அதே நாளில் கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதியானது வேறோர் மீதியையும் காட்டியது மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையானது பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது

- ❖ தீர்க்கப்படாமல் இருந்த மீதி ஒன்றிற்கு விநியோகஸ்தரால் விதிக்கப்பட்ட வட்டி ரூபா 5000 கடன்கொடுத்தோர் பேரேட்டில் மட்டும் பதியப்பட்டது.
- ❖ கொள்வனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 104000 கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 140000 ஆக பதியப்பட்டது.

31.03.2022 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதி

1) ரூபா 292000
2) ரூபா 333000
3) ரூபா 359000
4) ரூபா 239000
5) ரூபா 297000

(……….)

11. 31.03.2022 இல் உள்ளவாறு ரேணு PLC இன் பரீட்சை மீதி சமப்படவில்லை தொடர்ந்து மேற்கொண்ட பரிசீலனையானது பின்வருவனவற்றை வெளிக்கொணர்ந்து
காசுக்கொடுப்பனவு நாளேட்டின் செலவுகள் எனும் பகுப்பாய்வு நிரலில் உள்ளடங்கியுள்ள காப்புறுதிக்கட்டணம் ரூபா 1800 உரிய கணக்கின் செலவுப் பக்கத்தில் பதிவிடப்பட்டது.
விற்பனை நாளேடானது ரூபா 10000 குறைவாக கூட்டப்பட்டிருந்தது.
காசுப் பெறுவனவு நாளேட்டின் விற்பனைப் பகுப்பாய்வு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 83000 காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதிவிடப்பட்டது
மேற்கூறிய பிழைகளைத் திருத்துவதற்கு முன்னருள்ள தொங்கல் கணக்கு மீதி

1) ரூபா 83000 வரவு
2) ரூபா 93000 செலவு
3) ரூபா 81200 செலவு
4) ரூபா 81200 வரவு
5) ரூபா 79400 செலவு

(………..)

➢ **12ம் 13ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

*01 – 01 – 2022* இல் காசாக ரூபா *500000* ஐ வங்கியின் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட்டு வியாபார முயற்சி ஒன்றினை ஆரம்பித்தார்

ஜனவரிமாதத்திற்கான

காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 500000 | கடன்கொடுத்தோர் | 80000 |
| விற்பனை | 220000 | கொள்வனவு | 40000 |
| | | மீதி/ | 600000 |
| | 720000 | | 720000 |

கொடுப்பனவுகள் அனைத்தும் வங்கியூடாக மேற்கொள்ளப்படும் அதே வேளை விற்பனை மூலம் கிடைக்கும் காசும், காசோலைகளும் உடனடியாக வங்கியிலிடப்படும் விற்பனை மூலம் கிடைத் காசு ரூபா *80000* ஆகும்.

வங்கிக்கூற்றில் இருந்து கிடைக்குப்பெற்ற விபரங்கள் வருமாறு

மாற்றப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூபா *100000*

வசூலிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூபா *120000*

நேரடிவைப்பு ரூபா *50000*

வங்கி அறவிட்ட சேவைக்கட்டணம் ரூபா *1400*

*12.* ஜனவரி மாதம் மாற்றப்பாத, வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி முறையே
*1)* ரூபா *20000*, ரூபா *20000*
*2)* ரூபா *100000*, ரூபா *20000*
*3)* ரூபா *20000*, ரூபா *100000*
*4)* ரூபா *10000*, ரூபா *100000*
*5)* ரூபா *20000*, ரூபா *10000* (………..)

*13.* ஜனவரி மாதத்திற்கான திருத்திய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதியும், வங்கிக் கூற்று மீதியும் முறையே
*1)* ரூபா *650000*, ரூபா *648600*
*2)* ரூபா *598600*, ரூபா *650000*
*3)* ரூபா *650000*, ரூபா *750000*
*4)* ரூபா *648600*, ரூபா *648600*
*5)* ரூபா *648600*, ரூபா *650000* (………..)

*14.* வரையறுத்த ஆரோன் கம்பனி பெறுமதி சேர் வரிக்காக(VAT) பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும். கம்பனியானது விற்பனைகள் மூலம் சேகரித்த பெறுமதி சேர் வரியிக் மொத்தத்தொகை ரூபா *120000* ஆகும். அத்துடன் கொள்வனவுக்காக செலுத்திய பெறுமதி சேர் வரி ரூபா *90000* இதனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தேறிய பெறுமதி சேர் வரி ரூபா *30000* ஆகும். கம்பனியின் நோக்கில்

ரூபா *120000*, ரூபா *90000* ரூபா *30000* என்பன முறையே பின்வருவனவற்றைக் குறிப்பிடும்.
*1)* வருமானம், செலவு, பொறுப்பு
*2)* செலவு, வருமானம், பொறுப்பு
*3)* பெறுவனவு, கொடுப்பனவு, உரிமையாண்மை
*4)* பொறுப்பு, சொத்து, பொறுப்பு
*5)* வருமானம், சொத்து, பொறுப்பு (………..)

*15.* தனி வியாபாரமொன்றின் உரிமையாண்மையை கீழே கொடுக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கலில் எது தாக்கத்தை ஏற்படுத்தாது.
*1)* உரிமையாளரால் இடப்படும் மூலதனம்
*2)* உரிமையாளரால் எடுக்கப்பட்ட காசு
*3)* நிலுவைச் செலவினங்களுக்கான காசுக்கொடுப்பனவு
*4)* செலவினங்களுக்கான காசுக் கொடுப்பனவு
*5)* குறித்த வீத இலாபத்துடன் பொருட்கள் கடனுக்கு விற்பனை (………..)

16. பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் நிதிக் கணக்கீட்டில் எம் மூலங்களுக்குட்பட்டது என்பதைக் குறிப்பிடுக.

1) விற்பனைத் திரும்பல் கணக்கு ………………………………
2) பற்றுக்கணக்கு ………………………………
3) அறவிடமுடியாக்கடன் கணக்கு ………………………………
4) திரண்டதேய்வுக் கணக்கு ……………………………… (………..)

17. தனியாள் உரிமை வியாபாரமொன்றுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்கள் சரியா or பிழையா என்பதைக் குறிப்பிடுக. சரி/ பிழை

1) நிறுவன செயற்பாட்டுப் பெறுபேற்றை அறிய வருட இறுதியில் வருமான, செலவுக்கணக்குகள் மூடப்பட்டு வருமானக் கூற்று தயாரிக்கப்படுகின்றது. …………….
2) மூலதனத்தினதும், நிறுத்திவைத்த வகுவாய்களினதும் கூட்டுத் தொகை உரிமையாண்மைக்கு சமனாகின்றது …………......
3) தனியாள் உரிமைவணிகத்தின் நிதிக்கூற்றுக்களில் அக்கறை செலுத்துவோர் உரிமையாளர் ஒருவர் மட்டுந்தான் ……………...
4) உரிமையாளரால் வியாபாரம் செயற்படுத்தப்படுவதானால் முகாமைக்கணக்கீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுவது பயனற்றதாகும். ……………...

18. தனியாள் உரிமை வியாபாரமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் உரிமையாண்மையின் அதிகரிப்புக்கு '✓' காரணமாக அமையுமா என்பதைக் குறிப்பிடுக.
அதிகரிக்குமாயின் எனவும் அதிகரிக்கப்படாதாயின் "x" எனவும் குறிப்பிடுக.

1) கடன் கொடுத்தோர் மீதியினைக் கொடுத்துத் தீர்க்கும் போது பெறப்பட்ட காசுக்கழிவு ரூபா 5000 ………..
2) உரிமையாளர் தனது சொந்தப் பணத்தில் இருந்து நிறுவனத்தின் செயற்பாட்டுச் செலவினமான ரூபா 40000 ஐச் செலுத்தியுள்ளார். …………
3) உரிமையாளர் ரூபா 50000 பெறுமதியான உபகரமொன்றினை நிறுவனப் பயன்பாட்டிற்காக வழங்கியுள்ளார். …………
4) ரூபா 50000 கொள்விலையான பொருட்கள் ரூபா 49000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. …………

19. கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்களும், வழுத்திருத்தங்களும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை அதிகரிக்குமா or மாற்றமின்மையை ஏற்படுத்துமா என்பதைக் குறிப்பிடுக.

1) காலப்பகுதியில் அறவிட முடியாக்கடன் பதிவளிக்கப்படும்போது ……………
2) கடன்பட்டோரின் தனிப்பட்ட கணக்கில் பதிவு செய்யப்படாத எதிர்த்தீர்த்தல் பதிவு செய்யப்பட்ட போது …………….
3) அனுமதிக்கப்பட்ட வியாபாரக் கழிவினை கருத்திற் கொள்ளாமல் பதிவு செய்யப்பட்ட கடன் விற்பனைத் தொகை திருத்தம் செய்யப்படும் போது ……………
4) கடன்பட்டோரிடம் பெறப்பட்ட ஓர் காசோலை மறுக்கப்பட்டமை தொடர்பில் கொடுத்த கழிவு இரத்துச் செய்யப்படும் போது …………….

20. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பதிவேடுகள் எவையென குறிப்பிடுக.

1) கடன்பட்டோரிடம் இருந்து கிடைத்த காசோலை மறுக்கப்படுதல் …………….
2) உரிமையாளர் மூலதனமாக நடைமுறையல்லாச் சொத்தினை அறிமுகப்படுத்திய போது …………….
3) பொருட்கள் கொள்விலையிலும் குறைந்த விலையில் கடனுக்கு விற்பனை செய்யப்படுதல் …………….
4) சில்லறைக் காசாளரால் கடன்கொடுத்தோர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட தொகை …………….

21. சாம்பவி நிறுவனத்தின் 31 – 12 – 2021 இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனை | | 200000 |
| விற்பனைத்திரும்பல் | | 5000 |
| கொள்வனவு | 180000 | |
| உட்சுமைக்கூலி | 3000 | |
| மூலதனம் | | 78000 |
| காசு | 90000 | |
| தொங்கல் | 10000 | |
| | **283000** | **283000** |

பரீட்சை மீதி தயாரிப்பின் போது ஏற்பட்ட தவறு ஒன்றின் காரணமாக மேற்படி தொங்கல்கணக்கு தோற்றம் பெற்றது. தவறினை திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தருக. (விளம்பல் அவசியம்)

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

22. கணக்கீட்டு வெளியீடுகளாக கருதப்படுபவைகள் எவை?

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

23. பின்வரும் மாறிகளுக்கு பொருத்தமான கணக்கீட்டு சூழற்காரணிகளை குறிப்பிடுக.

| மாறிகள் | சூழற்காரணி |
|---|---|
| 1) நாணயமாற்று விகிதம் | ………………………….. |
| 2) கணக்கீட்டு நியமங்கள் | ………………………….. |
| 3) தனிநபர் வாழ்கைப்போக்கு | ………………………… |
| 4) கணக்கீட்டுடன் தொடர்புடைய வழக்குத் தீர்ப்புக்கள் | ………………………… |

24. நிறுவனமொன்றின் கொள்வனவுத் திரும்பல் நாட்குறிப்பேட்டின பூரணப்படுத்தப்படாத பகுதிகளை பூரணப்படுத்துக.

| திகதி | வழங்குநர் | பெறுமதி | VAT 8% | மொத்த பெறுமதி |
|---|---|---|---|---|
| 06.01.2022 | சீதா | ………… | …………. | 1836 |
| 18.01.2022 | சாமந்தி | ………… | …………. | 1296 |
| 31.01.2022 | ………… | ………… | ………… | 3132 |

25. பின்வரும் கணக்கீட்ட வழுக்களை வெளிக்காட்டும் வழு, வெளிகாட்டா வழு எவையென குறிப்பிடுக.

1) அனந்தியிடம் கொள்வனவு ரூபா 20000 நாளேட்டில் இரு தடவை பதிவு செய்யப்பட்டது …………….
2) உரிமையாளர் காசாக பற்றிய ரூபா 1400 காசுக் கொடுப்பனவு நாளேட்டின் செலவுகள் எனும் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டிருந்தது …………….
3) சேகரிடம் கொள்வனவு ரூபா 4000 அவரது தனிப்பட்ட கணக்கில் ரூபா 400 என வரவு வைக்கப்பட்டிருந்தது …..……….
4) விற்பனைத் திரும்பல் நாளேட்டின் கூட்டுத் தொகை ரூபா 1200 விற்பனைத் திரும்பல் கணக்கில் ரூபா 120 ஆக வரவு வைக்கப்பட்டது ……………...

## பகுதி II

**அறிவுறுத்தல்கள்:**

- ❖ **முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- ❖ **ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.**
- ❖ **உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.**
- ❖ **இவ்வினாத்தாளுக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.**

01) ஈஸ்வரன் வணிகமானது சிறு செலவுகளை மாத்திரம் காசாக மேற்கொள்கின்ற அதேவேளை ஏனைய கொடுக்கல்வாங்கல்களை வங்கியூடாகவே மேற்கொள்கின்றன காசுவிற்பனைகள் உடனடியாக வங்கியிலிடப்படுகின்றன.

31-12-2021 இல் வணிகத்தின் ஏடுகளில் இருந்து பிரத்தெடுத்த மீதிகள் வருமாறு

| | ரூபாவில் |
|---|---:|
| ஆதனம் பொறித் தொகுதி உபகரணங்கள் | *300000* |
| வியாபார வருமதியாளர்கள் | *125000* |
| வியாபார சென்மதியாளர்கள் | *80000* |
| வங்கி மீதி | *140000* |
| சில்லறைக் காசுமீதி | *800* |
| நிலுவை மின்கட்டணம் | *4600* |

*2022* ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் வருமாறு

| திகதி | விபரம் | காசோலை இலக்கம் | பெறுமதி ரூபாவில் |
|---|---|---|---:|
| 01-01-2022 | சில்லறைக்காசாளனுக்கு வழங்கிய முற்பணம் | 10001 | 1200 |
| 02-01-2022 | நிலுவை மின்கட்டணம் செலுத்தியது | 10002 | 4600 |
| 03-01-2022 | கொள்வனவு | 10003 | 18000 |
| 05-01-2022 | விற்பனை | - | 70000 |
| 08-01-2022 | சம்பளம் | 10004 | 12000 |
| 10-01-2022 | ஈஸ்வரன் சொந்த தேவைக்கு பற்றி பண்டங்களின் கிரயம் | | 5000 |
| 13-01-2022 | விளம்பரம் | 10005 | 8000 |
| 14-01-2022 | கடன்கொடுத்தோரான சிவனுக்கு வரைந்த காசோலை (இதன்போது கிடைத்தகழிவு ரூ3000) | 10006 | 47000 |
| 15-01-2022 | வியாபார வருமதியான விமலிடம் இருந்து கிடைத்த காசோலை (இதன்போது அனுமதிக்கப்பட்ட கழிவு ரூபா 2000) | 46445 | 30000 |
| 20-01-2022 | விளம்பரத்திற்காக வரைந்த *10005*ம் இலக்க காசோலை பிழையாக எழுதப்பட்டமையால் திருப்பப்பட்டிருந்தது இதற்குப்பதிலாக வழங்கப்பட்ட காசோலை | 10007 | 8000 |
| 23-01-2022 | விமலிடம் இருந்து கிடைத்த காசோலைமதிப்பிழந்ததாக வங்கி அறிவித்தல் கிடைக்கப்பெற்றது இதனால் கொடுத்தகழிவும் செல்லுபடியற்றதாக்கப்பட்டது. | | |
| 30-01-2022 | சிங்கர் நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களின் கிரயம் | | 40000 |
| | சில்லறைக்காசாளரால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பான விபரம் | | |
| 04-01-2022 | அஞ்சஞ்செலவு | | 200 |
| 06-01-2022 | எழுதுகருவி | | 150 |
| 08-01-2022 | துப்பரவாக்கல் | | 250 |
| 18-01-2022 | தபாற்செலவு | | 100 |
| 20-01-2022 | துப்பரவாக்கல் | | 150 |
| 28-01-2022 | எழுதுகருவி | | 100 |
| 30-01-2022 | வியாபாரசென்மதியரான சுமனுக்கு செலுத்தியது | | 500 |

வேண்டப்படுவது

அ) காசுப் பெறுவனவு நாளேடு

ஆ) காசுக் கொடுப்பனவு நாளேடு

இ) சிறு செலவுக் கொடுப்பனவு நாளேடு

ஈ) பொதுப்பேரேட்டில் அவசியமான கணக்குகள்

02) செல்வா தனியார் கம்பனியானது பெறுமதி சேர் வரிக்காக VAT பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும். பின்வரும் மீதிகள் 01-01-2022இல் உள்ளவாறான பேரேட்டில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | பெறுமதி |
|---|---|
| காசு | 100000 |
| வியாபாரக்கடன்பட்டோர் | 140000 |
| வியாபாரக்கடன்கொடுத்தோர் | 120000 |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கு (செலவு) | 20000 |

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் 2022 ஜனவரி மாதத்துடன் தொடர்புடையன

i) கடன் விற்பனை தொடர்பான விபரங்கள்

| வாடிக்கையாளர் பெயர் | திகதி | பெறுமதி (பட்டியல் விலையில்) | 8% Vat |
|---|---|---|---|
| சதா | 10 – 01 - 2022 | 300000 | 21600 |
| மயூரா | 12 – 01- 2022 | 400000 | 28800 |
| சாரா | 18 – 01 – 2022 | 500000 | 36000 |

பட்டியல் விலையில் 10% வியாபாரக் கழிவு கழித்து விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டது. விற்பனை இடம்பெற்ற 15 நாட்களுக்குள் பணம் செலுத்தப்படின் VAT நீங்கலான விற்பனை விலையில் 10% காசுக் கழிவு அனுமதிக்கப்படும்.

ii) கடன் கொள்வனவு தொடர்பான விபரம்

| வாடிக்கையாளர் பெயர் | திகதி | பெறுமதி கொள்விலையில் | 8% / Vat |
|---|---|---|---|
| அருள் | 14-01-2022 | 300000 | 24000 |
| காசி | 15-01-2022 | 250000 | 20000 |
| வேந்தன் | 20-01-2022 | 200000 | 16000 |

iii) சதா ரூபா 50000 பட்டியல் விலையான பொருட்களை திருப்பி அனுப்பியிருந்தார். அத்துடன் வேந்தனுக்கு ரூபா 20000 கொள்விலையான பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன.

iv) காசுப்பெறுவனவு கொடுப்பனவு தொடர்பான விபரங்கள்

ஜன 04 – ஆரம்ப கடன்பட்டோரிடம் ரூபா 10000 கழிவு அனுமதிக்கப்பட்டு முழுத்தொகையும் பெறப்பட்டது.

ஜன 07 – ஆரம்ப நிலுவை மீதிகள் (VAT உள்ளடங்கலாக) கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளது.

ஜன 12 – காசுக்கு பொருட்கள் கொள்வனவு ரூபா 400000

ஜன 16 – காசுக்கு பொருட்கள் விற்பனை 432000 (8% VAT உள்ளடங்கலாக)

ஜன 21 – மயூராவிடம் இருந்தும் சாராவிடம் இருந்தும் முழுத்தொகையும் காசாக பெறப்பட்டது.

ஜன 24 – காசிக்கு செலுத்த வேண்டிய தொகையில் ½ பங்கு காசாக செலுத்தப்பட்டது.

ஜன 28 – அருளுக்கு கொடுக்க வேண்டிய தொகை முழுவதும் காசாக செலுத்தப்பட்டது. இதன் போது VAT நீங்கலான விலையில் 10% கழிவு பெறப்பட்டது.

ஜன 31 செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 40000

காசுக் கொள்வனவு, செயற்பாட்டுச் செலவுகளுக்கு VAT வரி பொருந்தமற்றது.

வேண்டப்படுவது :

*31-01-2022* இல் முடிவடைந்த மாதத்திற்கான பின்வரும் மூலப்பதிவேடுகளும் பேரேட்டுக் கணக்குகளும்.

(1) காசுப் பெறுவனவு நாளேடு
(2) காசுக்கொடுப்பனவு நாளேடு
(3) விற்பனை நாளேடு
(4) கொள்வனவுநாளேடு
(5) உட்திரும்பல் நாளேடு
(6) வெளித்திரும்பல் நாளேடு
(7) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
(8) கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

03) மோட்டார் வண்டிகளையும் அதற்கான உதிரிப்பாகங்களையும் விற்பனை செய்யும் பழனிமோட்டோர்ஸ் நிறுவனத்தின் ஏடுகளில் *01-01-2022* இல் காணப்பட்ட மீதிகள் வருமாறு

| | '000' ரூபாவில் |
|---|---|
| ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்கள் | *30000* |
| மோட்டார்வண்டிகளினதும், அதன் உதிரிப்பாகங்களினதும் இருப்பு | *80000* |
| வியாபார வருமதியாளர் | *6000* |
| காசு | *21000* |
| வங்கிக்கடன் | *20000* |
| வியாபார சென்மதியாளர் | *40000* |
| விற்பனை முற்பணமும் நிலுவைச் செலவினங்களும் | *20000* |

*2022* ஜனவரி மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் வருமாறு

| | |
|---|---|
| 02-01-2022 | ஒவ்வொன்றும் ரூபா *200000* படி *10* மோட்டார் வண்டிகள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன. |
| 08-01-2022 | நிறுவனப் பயன்பாட்டிற்கென ரூபா *4000000* இற்கு லொறி ஒன்று கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. மேற்படி கடன் தவணை அடிப்படையில் செலுத்தப்படும். |
| 10-01-2022 | *02-01* இல் கொள்வனவ செய்யப்பட்ட மோட்டார் வண்டிகளில் ஒவ் *220000* படி *6* மோட்டார் வண்டிகள் கடனுக்கும், ஒவ்வொன்றும் ரூபா *215000* படி *2* மோட்டார் வண்டிகள் காசுக்கும் விற்பனை செய்யப்பட்டன. |
| 15-01-2022 | ரூபா *12000000* கிரயம் கொண்ட உதிரிப்பாகங்கள் ரூபா *15000000* இற்கு வாடிக்கையாளர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டது. இதற்காகக *2021* டிசெம்பர் மாதம் வாடிக்கையாளர் முற்பணமாக ரூபா *5000000* வழங்கியிருந்தார் மீதிப்பணம் பெறவேண்டியுள்ளது. |
| 18-01-2022 | *2021* டிசம்பர் மா வாடகைப் பணம் ரூபா *20000*ம் *2022* ஜனவரி மாத வாடகைப் பணம் ரூபா *25000* மும் காசாக செலுத்தப்பட்டது. |
| 20-01-2022 | வங்கிக்கடன் தவணைக்கட்டணம் ரூபா *520000* செலுத்தப்பட்டது. இதில் உள்ளடங்கியுள்ள வட்டித் தொகை ரூபா *20000* ஆகும். |
| 22-01-2022 | உரிமையாளர் தனது மகனின் தேவைக்கென ரூபா *300000* கிரயம் கொண்ட மோட்டார் வண்டி ஒன்றினை எடுத்திருந்தார். |
| 24-01-2022 | 15-01 இல் விற்பனை செய்யப்பட்ட உதிரிப்பாகங்களில் ரூபா *500000* கிரயம் கொண்ட உதிரிப்பாகங்கள் வாடிக்கையாரால் திருப்பி அனுப்பட்டிருந்தன. |
| 26-01-2022 | நிறுவனப் பயன்பாட்டில் உள்ள மோட்டார் வாகனங்களுக்கு வருடாந்தம் மேற்கொள்ளப்படும் திருத்த வேலைகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட உதிரிப்பாகங்களின் கிரயம் ரூபா *500000* ஆகும். |
| 31-01-2022 | நீண்டகாலம் விற்பனையாகாதிருந்த ரூபா *500000* கிரயம் கொண்ட உதிரிப்பாகங்கள் ரூபா *400000* ற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன |

வேண்டப்படுவது

1) கீழ்வரும் கணக்கீட்ச் சமன்பாட்டைப் பயன்படுத்தி 01-01-2022 இல் காணப்பட்ட மீதிகளைப் பதிவு செய்வதுடன் திகதி ஒழுங்கில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை கூடுமாயின் (+) எனவும், குறையுமாயின் (-) எனவும் அந்தந்தப் பெறுமதிக்கெதிரே குறிப்பிடவும்.

| | "000" ரூபாயில் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| திகதி | ஆதனம் பொறி உபகரணங்கள் | மோட்டார் வாகனங்களதும் அதன் உதிரிப்பாகங்களினதும் இருப்பு | வியாபார வருமதியாளர் | காசு | நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | வியாபார சென்மதியாளர் | விற்பனை முற்பணமும் நிலுவைச் செலவினங்களும் | உரிமையாண்மை |
| ஆரம்ப மீதி | | | | | | | | |
| கொ. வா. திகதி | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| இறுதி மீதி | | | | | | | | |

04) பின்வரும் தகவல்கள் மாதங்கி நிறுவனத்துடன் தொடர்புடையதாகும்.
2022 பெப்ரவரி மாத வங்கிக்கணக்கிணக்கக் கூற்றில் காணப்பட்ட விடயங்கள்

| | காசோலை இலக்கம் | பெறுமதி ரூபாவில் |
|---|---|---|
| மாற்றப்படாத காசோலைகள் | 100176 | 2000 |
| | 100180 | 5000 |
| வசூலிக்கப்படாத காசோலைகள் | 900202 | 3000 |
| | 200101 | 6000 |

2022 மார் மாதத்திற்கான காசுப் பெறுவனவு நாளேடு

| திகதி | விபரம் | பெறுமதி | பகுப்பாய்வு நிரல் | |
|---|---|---|---|---|
| | | | கொள்வனவு | கடன்கொடுத்தோர் |
| 04- 03 | நிமல் 124500 | 5000 | | 5000 |
| 06-03 | கமல் 890222 | 1000 | | 1000 |
| 08-03 | அலன் 750200 | 1200 | | 1200 |
| 20-03 | சரத் 500500 | 1800 | | 1800 |
| 21-03 | விற்பனை | 5000 | 5000 | |
| 31-03 | ராஜ் 124456 | 10000 | | 10000 |
| | | 24000 | 5000 | 19000 |

2022 மார்ச் மாதத்திற்கான காசுக் கொடுப்பனவு நாளேடு

| திகதி | விபரம் | பெறுமதி | பகுப்பாய்வு நிரல் | |
|---|---|---|---|---|
| | | | விற்பனை | கடன்பட்டோர் |
| 06-03 | திலக் 100181 | 1000 | | 1000 |
| 08-03 | சாலி 100182 | 3000 | | 3000 |
| 12-03 | சிந்து 100183 | 2000 | | 2000 |
| 18-03 | சாந்தி 100184 | 2000 | | 2000 |
| 20-03 | சிந்து 100185 | 2000 | | 2000 |
| 31-03 | கொள்வனவு 100186 | 4000 | 4000 | |
| | | 14000 | 4000 | 10000 |

2022 மார்ச் மாதத்திற்கான காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி வந்தது | 3000 | கடன்கொடுத்தோர் | 10000 |
| கடன்பட்டோர் | 19000 | கொள்வனவு | 4000 |
| விற்பனை | 5000 | மீதி / சென்றது | 15000 |
| மறுக்கப்பட்ட காசோலை | 2000 | | |
| | 29000 | | 29000 |

ஏனைய தகவல்கள்

1) சிந்துவிற்கு வரையப்பட்ட 100183ம் இலக்க காசோலை வங்கிக் கருமபீடத்தில் மதிப்பிழந்ததாக வாடிக்கையாளர் அறிவித்திருந்தார். இதற்குபதிலாக 100185ம் இலக்க காசோலை வழங்கப்பட்டிருந்தது.

2) 2022 மார்ச்சில் மாற்றப்பட்ட காசோலை விபரம்
02-03 இல் 100176ம் இலக்க காசோலை
03-03 இல் 100180ம் இலக்க காசோலை
2022 மார்ச் மாதம் வரையப்பட்ட காசோலைகளில் 100184ம் இலக்க காசோலை மாற்றப்படவில்லை ஏனைய காசோலைகள் வரையப்பட்ட திகதிக்கு மறுநாள் மாற்றப்பட்டிருந்தன.

3) 2022 மார்சில் வசூலிக்கப்பட்ட காசோலை விபரம்
01-03 இல் 900202ம் இலக்க காசோலை
05-03 இல் 200101ம் இலக்க காசோலை
2022 மார்ச் மாதம் வைப்பிலிடப்பட்ட காசோலைகள்
வைப்பிலிடப்பட்ட திகதியில் இருந்து ஒரு நாளின் பின்னர் வசூலிக்கப்பட்டிருந்தன.
(உதாரணம் 5ம் திகதி வைப்பிலிட்டால் 7ம் திகதி வசூலிக்கப்பட்டிருத்தல்)

4) காசாகப் பெறப்படுபவை அன்றைய தினமே வங்கியில் வைப்பிலிடப்படும்.

5) வங்கிக் கூற்றில் மட்டும் வெளிப்படுத்தப்பட்டவை
15 – 03 இல் வாடிக்கையாளர் நேரடி வைப்பு ரூபா 10000
23 - 03 இல் வங்கி விதிப்பனவு ரூபா 180
30 – 03 நிலையியற்கட்டளையின் பேரில் வங்கி செலுத்திய வாடகை ரூபா 8000

**வேண்டப்படுவது**

அ) 2022 மார்மாதத்திற்கான வங்கிக்கூற்று
ஆ) 2022 மார்மாதத்திற்கான திருத்திய காசுக்கட்டுப்பாட்டக் கணக்கு
இ) 2022 மார்மாதத்திற்கான வங்கிகக்கணக்கிணக்க கூற்று

05) அஞ்சனா வணிகத்தின் 2022 – ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் வருமாறு

(1) கடன்பட்டோர் பேரேட்டின் சுருக்கம் ‘000’ ரூபாவில்

| | அபி | அசோக் | அக்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01-01-2022 இல் மீதி | 100 | 250 | (50) | 300 |
| விற்பனை | 1200 | 700 | 900 | 2800 |
| விற்பனைத் திரும்பல் | - | (60) | (40) | (100) |
| கொடுத்த கழிவு | (5) | (10) | (8) | (23) |
| சேகரித்த காசு | (900) | (650) | (600) | (2150) |
| | 395 | 230 | 202 | 827 |

(2) கடன்கொடுத்தோர் பேரேட்டின் சுருக்கம் ‘000’ ரூபாவில்

| | இமாம் | இந்து | இந்திக்க | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01-01-2022 இல் மீதி | 110 | 120 | 100 | 330 |
| கொள்வனவுகள் | 800 | 700 | 940 | 2440 |
| கொள்வனவுத்திரும்பல் | (80) | (70) | - | (150) |
| பெற்றகழிவு | - | (40) | (30) | (70) |
| செலுத்திய காசு | | (740) | (720) | (1460) |
| | 830 | (30) | 290 | 1090 |

*31-01-2022* இல் கீழ்வரும் காரணங்களால் கட்டுபாட்டுக் கணக்கு மீதிகளும் பேரேட்டுமீதிகளின் மொத்தமும் வேறுபட்டிருந்தன.

1. அக்பரின் ஆரம்பமீதியைத் தவிர ஏனைய மீதிகள் கட்டுப்பாட்டுக் கணக்குகளில் பதிவிடப்பட்டிருந்தன.
2. விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை தவறுதலாக ரூபா *200000* ஆல் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.
3. இந்திக்கவிடம் கொள்வனவு தவறுதலாக நாளேட்டில் ரூபா *100000*த்தால் கூட்டிப் பதிவிடப்பட்டிருந்தது.
4. அபிக்கு அனுமதித்த கழிவு ரூபா *8000* ஆகும். காசுப் பெறுவனவு நாளேட்டில் குறைத்துப் பதிவிடப்பட்டிருந்தது.
5. இமாமுக்கு செலுத்திய காசு ரூபா *600000* தவறுதலாக காசுப் பெறுவனவு நாளேட்டின் கொள்வனவு எனும் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டிருந்தது.
6. இந்திக்காவிற்கு திரும்பி அனுப்பிய ரூபா *60000* கிரயமான பண்டங்கள் நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
7. காலந்தாழ்த்திய கடனுக்காக அசோக்கிற்கு விதித்தவட்டி ரூபா *10000* ஏடுகளில் பதிவு செய்யபடவில்லை

வேண்டப்படுவது

அ) திருத்தமுன் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள்

ஆ) திருத்திய கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள்

இ) திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியில் இருந்து திருத்த முன் பேரேட்டு மீதியை இனக்கம் செய்வதற்கான கூற்று.

06) குமுதம் நிறுவனம் *31-12-2022* இல் தயாரித்த பரீட்சைமீதியானது சமப்படவில்லை வித்தியாசம் ரூபா *1000* தொங்கல்கணக்கு வரவு வைக்கப்பட்டு பரீட்சைமீதி சமப்படுத்தப்பட்டது. ஏடுகளை பரிசீலனை செய்தபொழுது பின்வரும் தவறுகளும் விடுபாடுகளும் வெளிப்படுத்தப்பட்டன.

(i) காசுக்கு விற்பனை ரூபா *120000* காசுப்பெறுவனவு நாளேட்டில் கடன்பட்டோரிடம் பெற்றவைகள் எனும் பகுப்பாய்வு நிரலினுள் இடப்பட்டிருந்தது.

(ii) கடன்கொடுத்தோருக்க வரையப்பட்டு வழங்கப்பட்ட காசோலை ரூபா *5000* வங்கியால் மறுக்கப்பட்டது. பதிலாக புதிய காசோலை வழங்கப்பட்டு காசுக் கொடுப்பனவு நாளேட்டில் பதிவு செய்யப்பட்ட போதும் இது தொடர்பில் பொது நாட்குறிப்பு பதிவுகள் எனவும் மேற்கொள்ளப்படவில்லை

(iii) காசுக் கொடுப்பனவு நாளேட்டின் கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா *4000* கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.

(iv) கடன்பட்டோரான ஆனந்தனுக்கு அனுமதிக்கப்பட்ட கழிவு ரூபா *1000* காசுப் பெறுவனவ நாளேட்டில் ரூபா *100* என பதிவு செய்யப்பட்டிருந்தது.

(v) உரிமையாளர் சொந்ததேவைக்கு பற்றிய காசு ரூபா *7000* காசுக்கொடுப்பனவு நாளேட்டின் ஏனைய கொடுப்பனவுகள் எனும் பகுப்பாய்வு நிரலினுள் இடப்பட்டிருந்த போதும் உரிய கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(vi) விற்பனைத் திரும்பல் தொகை ரூபா *3800* விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(vii) கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு ரூபா *12000* காசுக்கொடுப்பனவு நாளேட்டில் கொள்வனவ எனும் பகுப்பாய்வு நிரலில் ரூபா *1200* என பதிவு செய்யப்பட்டிருந்தது.

(viii) வெளித்திரும்பல் கணக்கின் மீதி ரூபா *6000* பரீட்சை மீதிக்கு கொண்டுசெல்லப்படவில்லை.

(ix) வங்கிக்கடன் தவணைக்கட்டணமாக செலுத்திய தொகை ரூபா *42000* (இதனுள் உள்ளடங்கியுள்ள வட்டி தொகை ரூபா *2000*) காசுக்கொடுப்பனவு நாளேட்டின் ஏனைய கொடுப்பனவு நிரலுள் இடப்பட்டு வங்கிக் கடன்கணக்கு வரவு வைக்கப்பட்டது.

வேண்டப்படுவது

அ) மேற்படி தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

ஆ) தொங்கல் கணக்கு

(மொத்தம் *20* புள்ளிகள்)